விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை: பூ. பெருமாள் . இ.கா.ப.,

ந.க.எண்.அ1(3)/44219/2010 நாள்:31.01.2020
மாவட்ட ஆணை எண் : 143/2020

சிறுதலைப்பு: காவல் - விருதுநகர் மாவட்டம் - பணியமைப்பு - மறைந்த காவலர் 139 P.குருசாமி மகள் கு.உஷா நந்தினி (இளநிலை உதவியாளர்) என்பவரது தற்காலிக பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடுவது - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள்: 02.03.2016.
2. தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண். 1433/சிஎ.1/2005-03, நாள்: 17.03.2005.
3. தலைமையலுவலக குறிப்பாணை ந.க. எண். 084761/ என்.ஜி.பி2(2) /2018 நாள் 02.08.2018

ஆணை:

மறைந்த காவலர் 139 P.குருசாமி மகள் திருமதி. கு.உஷா நந்தினி, என்பவர் பார்வை (2) ல் குறிப்பிட்டுள்ள தலைமையலுவலக குறிப்பாணையின்படி தற்காலிக கணினி விவரப்பதிவாளராக விருதுநகர் மாவட்ட காவல் அலுவலகத்தில் கடந்த 01.09.2005 அன்று பணிநியமனம் செய்யப்பட்டு, அரசாணை நிலை எண். 220, உள்(காவல் -15) துறை, நாள்:18.02.2016, தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.175817/A&R/ 2007, நாள்:14.03.2016 இவ்வலுவலக ந.க.எண்.அ1(3)/582/ 13198/2016 (மாவட்ட ஆணை எண்:742/2016) நாள்: 05.07.2016-ன் படி கணினி விபர பதிவாளர் பணியினை கடந்த 01.05.2007 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலும், பார்வை (3) ல் கண்டுள்ள தலைமையலுவலக குறிப்பாணையின்படி இளநிலை உதவியாளராக பணி மாற்றம் செய்யப்பட்டு இம்மாவட்டத்தில் 10.08.2018 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார். இவரது மூலக்கோப்பினை பரீசீலனை செய்ததில் அவரது தகப்பனார் காவலர் 139 குருசாமி என்பவர் 07.05.1992 ஆம் ஆண்டு மரணம் அடைந்துள்ளார். அன்னாரது மனைவி திருமதி.G. கனகம் என்பவர் தனது மகள் கு.உஷா நந்தினி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார். மேலும், மறைந்த காவலர் மகள் கு.உஷா நந்தினி என்பவர் தனக்கு பணிநியமனம் வேண்டி மனு சமர்ப்பித்துள்ளார்.

3. மேற்கண்ட மறைந்த காவலர் வாரிசுதாரர் மூன்று வருடங்களுக்குள் மனு சமர்ப்பித்துள்ளார். அன்றைய தேதியில் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வி தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், பத்தாம் வகுப்பு சான்றிதழின் மெய்தன்மையை சென்னை பள்ளி கல்வித்துறை, இயக்குநரால் சரிபார்க்கப்பட்டுள்ளது.

4. தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்.041769/சி.ஏ.ஆர்1/2016, நாள்: 08.04.2016 ன் படி 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemtion of Government orders) தேவைப்படாத, தங்கள் கட்டுபாட்டின் கீழ் பணிபுரியும் அலுவலர்களின் பணியினை, நியமன அலுவலர்கள் பணிவரன்முறைப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பார்வை (3) ல் கண்டுள்ள தலைமையலுவலக குறிப்பாணையில் கணினி விவரப்பதிவாளர் பதிவியிலிருந்து பணிமாறுதல் முறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமத்துடன் கூடிய பணி வரன்முறைக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை பெறத்தேவையில்லை என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. எனவே, மேற்கண்ட மறைந்த அரசு ஊழியரின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுக்குள் மனு சமர்ப்பித்துள்ளதாலும், மனு சமர்ப்பித்த நாளன்று தனியர் இளநிலை உதவியாளர் பணி நியமனத்திற்கு தேவையான 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாலும், மேற்குறிப்பிட்டுள்ள தலைமையலுவலக குறிப்பாணைகளின்படி, திருமதி. கு.உஷா நந்தினி என்பவரது தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பணிக்கு அறிக்கை செய்த நாளான 10.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

ஒம்/பூ.பெருமாள்
காவல் கண்காணிப்பாளர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

பெறுநர்:
திருமதி. கு.உஷா நந்தினி, இளநிலை உதவியாளர், மாவட்ட காவல் அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.
நகல்: காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-04.
நகல்: அ2(2), டி1, டி2, எல்4 உதவியாளர்கள்.
நகல்: ஆணை புத்தகம்.

//உ.ந.உ.ப.அ//

5/12/2020
நிர்வாக அலுவலர்.
5/12/2020